**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.20/2020**
Prosecution: **PW3**

| | |
|---|---|
| Name | திரு.மணிகண்டன் |
| Father Name | திரு.முனுசாமி |
| PAN Card No | FAHPM5027B |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **06.02.2026.**

சாட்சியை மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு Crl.Mp.No.995/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.09.2025–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

1, 3 முதல் 7 எதிரிகள் ஆஜர். 2–ம் எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

கடந்த 02.03.2014–ம் தேதி சிலம்பரசன் என்னை அடித்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் அன்று பிற்பகல் 3.00 மணியளவில் புகார் கொடுத்தேன். சிலம்பரசன் என்னை அன்று காலை 10.00 மணியளவில் என்னை அடித்தார். என்னை அவர் அடித்த பின்னர் உடனே காவல் நிலையம் தான் சென்றேன். காலை 10.00 மணிக்கு சம்பவம் நடந்த பிறகு நான் மீண்டும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. நான் 10.00 மணிக்கு அந்த இடத்தை விட்டு சென்ற பிறகு மீண்டும் அந்த இடத்தில் யார் யாருக்கு என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது சிலம்பரசன் மட்டும் தான் என்னை அடித்ததாக சொன்னேன். நான் சிகிச்சைக்காக ஆற்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்ற போதும் அங்கிருந்த மருத்துவரிடம் சிலம்பரசன் என்னை தாக்கியதாக கூறினேன். நடராஜன் என்பவர் இறந்த துக்க நிகழ்விற்கு நான் செல்லவில்லை. நடராஜன் இறந்துவிட்டார் என்பதை நான் பிறர் சொல்லி கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்பவத்தில் யார்யாரை எந்தெந்த

மருத்துவமனைக்கு யார் யார் அழைத்து சென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. வேலூர் சத்துவாச்சாரி நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.3 அவர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 164–ன் வாக்குமூலம் கொடுக்க போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேனா என்றால் அவர்கள் சொல்லிக் கொடுக்கவில்லை. ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியத்தில் நான் சொன்ன விவரங்கள் போலிசார் சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நான் கேள்விப்பட்ட விவரங்களை சொன்னேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.